<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

<u>S.C.No. 128/2024</u>

Deposition of witness for Prosecution/Defence/Court : <u>P.W.2</u>

<u>Accused present</u>

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.கருப்பசாமி | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 25th day of February, 2026.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வத்றாப் மறவர் தெற்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் பெயின்டராக பணி செய்துவருகிறேன். எனது பெற்றோர்கள் மாடு வளர்த்து தொழில் செய்துவருகின்றனர். இந்த வழக்கில் இறந்துபோனவர் எனது தகப்பனார் ஆவார். ஆஜர் எதிரி எனது சித்தப்பா மகன் ஆவார். எனது குடும்பத்திற்கும் எதிரிக்கும் என்ன பிரச்சனை என்றால் சொத்து தகராறு. எனது அப்பா பெயரில் உள்ள இடத்தில் எதிரி வீட்டை கட்டிவிட்டார். அவ்வாறு வீட்டை கட்டிய எதிரி மேற்படி சொத்தினை தனது பெயருக்கு எழுதிக்கொடுக்குமாறு எனது அப்பாவை அடிக்கடி அசிங்கமான வார்த்தைகளால் வைது எனது அப்பாவை மிரட்டிவந்தார்.

கடந்த 27.02.2024 ம் தேதி நான் எனது வீட்டில் இருந்தேன். எனது அம்மாவும் அப்பாவும் மாடு மேய்ப்பதற்காக மாடுகளை அழைத்து சென்றார்கள். அப்போது மதியம் 3.30 மணிக்கு எனது அம்மா வீட்டிற்கு பதட்டத்துடன் வந்தார். ஏன் அழுதுகொண்டே வருகிறீர்கள் என்று நான் கேட்டேன். அதற்கு எனது

அம்மா நானும் அப்பாவும் ஓலைப்பெட்டி வெள்ளைச்சாமி தோப்பில் மாடு மேய்த்துக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த எனத சித்தப்பா மகன் கர்ணன் எனது அப்பாவை பார்த்து ஏண்டா கிழட்டுத்தேவிடியா மகனே சொத்தை எழுதித்தரமாட்டியா நீ எல்லாம் ஏண்டா உயிரோடு இருக்கே என்று சொல்லி கையில் வைத்திருந்த ஆட்டுக்கத்தியால் எனது அப்பாவின் முகத்திலும் கையிலும் , வெட்டியதாக சொன்னார்.

உடனே நானும், எனது மாமா கணேசன், எனது தாயார் 3 பேரும் சேர்ந்து இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு ஓலைப்பெட்டி வெள்ளைச்சாமி தோப்பிற்கு சென்றோம். அப்போது எதிரி கர்ணன் எனது அப்பாவை தென்னை மட்டையை அள்ளிப்போட்டு எரித்துக்கொண்டிருந்தான். எங்களைப்பார்த்தவுடன் சொத்தினை எனது பெயருக்கு மாற்றிதராவிட்டால் உங்கள் வீட்டில் உள்ள ஒவ்வொருவரையும் கொன்றுவிடுவேன் என்று மிரட்டிவிட்டு கையில் வைத்திருந்த ஆட்டுக்கத்தியுடன் ரோட்டு பக்கம் போனார்.

அப்போது காட்டின் அருகாமையில் ஓடிக்கொண்டிருந்த ஓடையில் இருந்து தண்ணீரை எடுத்து தீயை அணைத்தோம். தீயை அணைத்தபிறகு எனது அப்பாவை பார்த்தபோது அவரின் முகம், கழுத்து, கை, ஆகியவற்றில் வெட்டுக்காயங்களுடன் எரிந்த நிலையில் குப்புற கிடந்தார்.

பின்னர் நானும் எனது மாமா கணேசன், எனது தாயார் கருப்பாயி ஆகியோர்கள் வத்றாப் காவல் நிலையம் சென்று அங்கு எனது தாயார் நடந்த சம்பவத்திற்கு புகார் கொடுத்தார். அந்த புகார் மனுவில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். புகார் மனுவில் உள்ள எனது **சாட்சி கையொப்பம் அசாஆ 3** ஆகும். நடந்த சம்பவம் தொடர்பாக நான் நீதித்துறை நடுவர் எண் 1 அவர்கள் முன்பு ஆஜராகி இரகசிய வாககுமூலம் அளித்துள்ளேன். நான் அளித்த இரகசிய வாக்குமூலம் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அந்த **இரகசிய வாக்குமூலம் அசாஆ 4** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை –</u>

எனது அப்பாவின் அன்றாட வேலை என்ன என்றால் மாடு மேய்ப்பது ஆகும். காலையில் மாடுகளை பத்திக்கொண்டு சென்று மதியம் சாப்பாடு அங்கு வைத்தே சாப்பிட்டு விடுவார் என்றால் சரிதான். மாலையில் வீட்டிற்கு வந்து மாடுகளுக்கு தீவனம் வைப்பது அவருடைய வேலை என்றால் சரிதான். எனது அம்மா எனது அப்பா காலையில் மாடு பத்திக்கொண்டு செல்லும்போது அவருக்கு சாப்பாடு வைத்துக்கொடுத்துவிடுவார் என்றால் சரியல்ல. எனது அம்மாவும் உடன் செல்வார். ஒவ்வொரு சமயத்தில் கொண்டுபோய் கொடுத்துவிடுவார். எனது அம்மா உடன் செல்லும்போது பாத்திரத்தில் சாப்பாடு எடுத்து செல்வார்கள் என்றால் சரிதான். எனது அம்மா சென்று சாப்பாடு கொடுக்கச்செல்லும்போது தனிப்பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு கொடுத்துவிட்டு வருவார். எனக்கு திருமணம் முடிந்து நான் எனது பெற்றோருடன் கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறேன்.

சம்பவத்தன்று எனது அம்மா சாப்பாடு கொடுத்துவிட்டு வந்தார்களா என்றால் கூடவே சாப்பாட்டை எடுத்துக்கொண்டு சென்றார். எதிரி எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட இடத்தில் வீடு கட்டியது சம்பந்தமாக ஊரில் பஞ்சாயத்து நடைபெற்று அந்த பஞ்சாயத்தில் எதிரி முதல் தவணையாக எனது தகப்பனாருக்கு ரூ. 50 ஆயிரம் கொடுத்து பாக்கித்தொகை கொடுப்பது சம்பந்தமாக எதிரிக்கும் எங்களுக்கும் பிரச்சனை உண்டு என்றால் சரிதான். எதிரி எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வீடு கட்டியது பங்காளி இடத்தில் வீட்டை மாற்றி கட்டியுள்ளார் என்றால் சரிதான்.

நானும் எனது அம்மாவும் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் சம்பவம் மணிகண்டன் தோட்டத்தில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் காவல் நிலையம் செல்லும்போது அங்கு எதிரி இருந்தாரா என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. நாங்கள் செல்லும்போது எதிரி காவல் நிலையத்தில் தான் இருந்தார் என்றாலும் வழக்கிற்காக அதனை

மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தென்னந்தோப்புகளில் காய்ந்து விழக்கூடிய மட்டைகளை தனியே ஒரு இடத்தில் குவித்து வைப்பது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு குவித்து வைக்கப்பட்டுள்ள மட்டைகளை தோப்பு உரிமையாளர்களே தீவைத்து எரித்து விடுவார்கள் என்றால் சரிதான். நான் , எனது மாமா, எனது அம்மா ஆகியோர்கள் ஓலைப்பெட்டி வெள்ளைச்சாமி தோப்பிற்குள் சென்று பார்த்தபோது எதிரி எனது அப்பாவை தென்னை மட்டைகளை போட்டு எரித்துக்கொண்டு இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

எனது இரகசிய வாக்குமூலத்தில் நாங்கள் சென்று பார்த்தபோது எனது அப்பாவின் தலை மட்டும் கருகாமல் இருந்தது. அருவாளால் வெட்டியதாக சொன்னார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு வாக்குமூலம் அளிக்கவில்லை. எனது இரகசிய வாக்குமூலத்தில் அவ்வாறு தான் உள்ளது என்றாலும் வழக்கிற்காக நான் அதனை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான், எனது மாமா, எனது அம்மா ஆகியோர்களை காவல் நிலையத்தில் இருந்து தகவல் சொல்லி வரச்சொன்னார்கள் என்றால் சரியல்ல. எங்களுடன் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.